முச்சந்தி முரளி




Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 358

செவ்வாய்க்கிழமை
19 நவம்பர் 2024

கார்த்திகை 04
வள்ளுவர் ஆண்டு 2055

பருத்தித்துறை - கற்கோவளம் முகாமிலிருந்து

# இராணுவத்தை வெளியேற ஜனாதிபதி அநுர உத்தரவு

## அமைச்சரவை பொறுப்பேற்ற சில மணி நேரங்களில் அதிரடி

**யாழ்ப்பாணம், நவம்பர் 19**

**வடமராட்சி, பருத்தித்துறை - கற்கோவளம் பகுதியில் தனியார் காணியில் அமைந்துள்ள இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினரை உடனடியாக வெளியேறுமாறு இராணுவத் தலைமையகத்தால் நேற்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.**

11



## அமைச்சரவை பதவியேற்பு நிதி, பாதுகாப்பு அநுரவிடம்

கொழும்பு, நவ. 19

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அமைச்சரவை நேற்றுப் பதவியேற்றுள்ளது. பிரதமராக ஹரிணியும், அவருடன் இணைந்த 21 அமைச்சர்களும் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டனர்.

பாதுகாப்பு, நிதி, திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி, டிஜிட்டல் பொருளாதார அமைச்சு ஆகியன ஜனாதிபதி அநுரகுமார 11

## டிசெம்பரில் இந்தியா செல்கிறார் அநுர!

கொழும்பு, நவ. 19

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் டிசெம்பர் மாதம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள் 11

தேசிய மக்கள் சக்தியின்

## தேசியப் பட்டியலின் ஊடாக எம்.பி.யான மாற்றுத்திறனாளி

கொழும்பு, நவ. 19

தேசிய மக்கள் சக்தி, தனது தேசியப் பட்டியல் ஆசனத்தை இலங்கை பார்வையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் சுகத் வசந்த டி சில்வாவுக்கு வழங்கியுள்ளது.

இதன்மூலம் இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் முதல்தடவையாக பார்வையற்ற நபர் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ளார். இவர் பார்வையற்றவர்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றில் செயற்படவிருப்பதால் 11

## நவம்பர் 23 பாடசாலை விடுமுறை

கொழும்பு, நவ. 19

அரச மற்றும் அரச அனுசரணையின்கீழ் இயங்கும் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணையின் முதலாம் கட்டக் 11

## லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டு; பொலிஸ் அலுவலர் கைதானார்

முல்லைத்தீவு, நவ. 19

பூநகரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரிடம் அவர் லஞ்சம் பெற்றார் என்று வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே அந்த அதிகாரி ரூ.15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணத்துடன் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விளக்கமறிய 11

## ஆளுந்தரப்புக்கு ஆசனம் போதாது

கொழும்பு, நவ. 19

நாடாளுமன்றத்தில் 159 உறுப்பினர்களை கொண்ட தேசிய மக்கள் சக்தி இருக்கைகள் போதாமை காரணமாக இம்முறை ஆளும் தரப்பு, எதிர்த் தரப்பு என இருபக்க இருக்கைகளிலும் அமர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 11

## யானையால் தாக்கப்பட்டு ஒருவர் பரிதாபச் சாவு!

முல்லைத்தீவு, நவ. 19

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கடந்த 8ஆம் திகதி யானையால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த குடும்பத்தலைவர் மேலதிக சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். 11



## அமைச்சரவையில் இரண்டு தமிழர்கள்

கொழும்பு, நவ. 19

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அமைச்சரவையில் இரண்டு தமிழர்களுக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்கு தெரிவான சரோஜா போல்ராஜ் மற்றும் தேசிய பட்டியல் ஊடாக வாய்ப்பளிக்கப்பட்டுள்ள இராமலிங்கம் சந்திரசேகரன் ஆகியோரே அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளனர். 11

# அதிகாரத்தை பொறுப்புடன் கையாள்வது மிக அவசியம்!

## அமைச்சர்களுக்கு அநுர அறிவுறுத்து



கொழும்பு, நவ. 19

அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை மிகவும் பொறுப்புடன் கையாளவேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை நியமனத்தின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது வெற்றி மகத்தானது. வெற்றியால் எமக்கு வழங்கப்பட்ட பொறுப்பின் எடை மிகக் கனதியானது. இந்த மாற்றத்துக்காக எமது நாட்டு மக்கள் மிகுந்த அர்ப்பணிப்புடனும், ஆர்வத்துடனும் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்று பதவியேற்ற புதிய அமைச்சரவை



## ஹரிணி அமரசூரிய

- பிரதமர்
- கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்றுறை கல்வி அமைச்சர்



## விஜித ஹேரத்

வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சர்



## பேராசிரியர் சந்தன அபேரத்ன

அரச நிர்வாகம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர்



## சரோஜா சாவித்திரி போல்ராஜ்

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர்



## கே.டி.லால்காந்த

விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர்



## அநுர கருணாதிலக்க

நகர அபிவிருத்தி, கட்டுமானத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர்



## இராமலிங்கம் சந்திரசேகர்

கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்கள் அமைச்சர்



## பேராசிரியர் உபாலி பன்னிலகே

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர்



## சுனில் ஹந்துன்நெத்தி

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்



## மருத்துவர் தம்மிக படபெந்தி

சுற்றாடல் துறை அமைச்சர்



## ஆனந்த விஜேபால

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர்



## பிமல் ரத்நாயக்க

போக்குவரத்து, நெடுஞ்சாலை, துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்



## பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி

புத்தசாசனம், மத மற்றும் கலை, கலாசார விவகாரங்கள் அமைச்சர்



## மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ

சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர்



## சமந்த வித்யாரத்ன

பெருந்தோட்டத்துறை மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்



## சுனில் குமார கமகே

இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்



## வசந்த சமரசிங்க

வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்



## பேராசிரியர் கிறிசாந்த அபேசேன

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்



## பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ

தொழில் அமைச்சர்



## குமார ஜெயக்கொடி

வலுசக்தி அமைச்சர்



## சட்டத்தரணி ஹர்சன நாணயக்கார

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்களின் அர்ப்பணிப்பை ஊடுகடத்துவது அவசியம்

## ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தெரிவிப்பு

**கொழும்பு, நவ.19**

**மாவீரர்களின் அதி உன்னத அர்ப்பணிப்பை உணர்வுபூர்வமாக ஊடுகடத்தும்கைங்கரியங்களை எம்சூழலில்முன்னெடுப்பது முக்கியமானது என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்புத் தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இது கார்த்திகை மாதம். இந்த மாதத்தில் எமது அடுத்த தலைமுறைக்கு குழந்தைகளுக்கு முன்னைய தலைமுறையின் தியாகங்களை, இந்த தாய் மண்ணுக்காக மாவீரர்கள் செய்த மகத்தான காரியங்களை, அதற்காக அவர்கள் தங்கள் உடல், பொருள், ஆவி என அனைத்தையும் அர்ப்பணித்த அதி உன்னதத் தன்மையை உணர்வுபூர்வமாக ஊடுகடத்தும் கைங்கரியங்களை எம் சூழலில் முன்னெடுப்பது முக்கியமானது.

எமது வீட்டின் முன்னுள்ள வீதியோரங்களை அந்தக் கால நினைவுகளோடு துப்புரவு செய்வோம். அந்த மனிதர்கள் நினைவாக மரங்களை நடுவோம். உன்னதமானவர்களைப் பற்றிய கதைகளை இளையவரோடு பகிர்ந்துகொள்வோம். அவர்களின் குடும்பங்களுக்கு உதவுவோம். இவை அந்த உன்னத தலைமுறைக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடன் மட்டுமல்ல எமது வருங்கால தலைமுறை ஒழுக்கம் மிக்க, மதுபோதையற்ற, அறநெறிப் பண்புமிக்க, சுயநலம் கடந்த பொதுநலச் சிந்தையோடு மிளிர முக்கியமானவை என மனம் கொள்வோம் என்றுள்ளது. (எ-22-66)

# புலமைப் பரீட்சை முடிவுகளை வெளியிட இடைக்காலத் தடை

கொழும்பு, நவ.19

அண்மையில் நடந்து முடிந்த தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு உயர்நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை விதித்துள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்பட்ட விதத்தைச் சவாலுக்குட்படுத்தி அதில் தோற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களைப் பரிசீலித்த பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பிரிதி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் மஹிந்த சமயவர்த்தன ஆகிய நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (எ-இ)



# சிறுவர்களிடையே வைரஸ் காய்ச்சல்

கொழும்பு, நவ.19

தற்போது நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக சிறுவர்களிடையே வைரஸ் காய்ச்சல் அதிகரித்துள்ளது என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். அதேவேளை, தற்போது டெங்குத் தொற்றும் அதிகரித்துவரும் நிலையில், சுவாசிப்பதில் சிரமம், தலைவலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை நாடவேண்டும் என்று பொரளை சீமாட்டி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (எ-22)

# ஆசிரியைகளால் தாக்கப்பட்ட மாணவி இறப்பு

வென்னப்புவ பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் 2 ஆசிரியைகளால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் பாடசாலை மாணவி ஒருவர் மூன்று மாதங்களுக்கு மேலாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அண்மையில் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளின் பின்னர், சந்தேகநபர்களாக கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஆசிரியர்கள் கடந்த செப்ரெம்பர் 13 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)



# யாழ். வரும் சீனத் தூதுவர்

யாழ்ப்பாணம், நவ, 19

இலங்கைக்கான சீனத் தூதுவர் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். அவர் யாழ்ப்பாணத்தில் இருநாள்கள் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-25)

# நுகர்வோர் அதிகாரசபையின் விசாரணைப் பிரிவு கலைப்பு!

கொழும்பு, நவ. 19

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் விசாரணைப் பிரிவுத் தலைவர் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பிரிவும் கலைக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கம் நுகர்வோர் விவகார அதிகார சபையின் சட்டத்துக்கு முரணான வகையில் விசாரணைப் பிரிவின் தலைவர் ஒருவரை நியமித்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அந்தப் பிரிவு கலைக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றி, வர்த்தக முன்னாள் அமைச்சரால் தன்னிச்சையாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம், நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு நியமிக்கப்பட்ட ஊடக அதிகாரியும் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார் என்றும், இந்த நியமனங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-25)



## தினம் தெரியுமோ?

கெடுகிறன் பார், பந்தயம் பிடி எண்டுதான் உந்த வீட்டுக்கட்சி இன்னும் வீம்புக்கு நிக்குது. தேசியப்பட்டியல் சீற்றை 'சத்தியமான' டாக்குத்தருக்கு குடுத்து, வில்லங்கத்தை விலைக்கு வாங்கியிருக்கினம். கட்சிக்குள்ள இவ்வளவு பிடுங்குப்பாடு வந்ததுக்கு உந்தச் சத்தியமான டாக்குத்தருக்கும் பங்கிருக்குது. அவர் அப்புக்காத்துவின்ர நிழல்மாதிரி நடக்கிறதால, கனக்க விசயங்களில குளறுபடி செய்து, தானும் குழம்பி, கட்சியையும் குழப்பிக் கொண்டே இருப்பார். நேற்று பட்சியில சொன்ன தேசியப் பட்டியல் லிஸ்றை ஈமெயில்ல அனுப்பி, அதைச் செல்லாக்காசாக்கின வித்துவான் இவர்தான். அவர் ஏன் அப்பிடி செல்லாக்காசாக்கினவர் எண்டு முந்தநாள் வடிவாத் தெரிஞ்சு போட்டுது. தனக்கு அந்த சீற்றை எடுக்கத்தான் அப்பிடி ஒரு நரிவேலை பார்த்திருக்கிறார். முந்தநாள் வவுனியாவில அரசியல் குழுக் கூட்டம் தொடங்கினவுடனேயே, மாவையர், குலநாயகத்தார் எண்டு 'நைன்ரிமார்' எழும்பி நிண்டுகொண்டு தங்களுக்குத்தான் தேசியப்பட்டியல் தரோணும் எண்டு ஒற்றைக் காலில நிண்டிருக்கினம். (அவையால ரண்டுகாலிலேயே ஒழுங்கா நிக்கமுடியாது எண்டது வேறகதை) ஆனால் அவையின்ர வயதையும், ஏலாத தன்மையையும் காட்டி, அவைக்கு சீற் குடுக்கக்கூடாது எண்டு எல்லாரும் சொன்னதால அவை ரண்டுபேரும் அடங்கிட்டினம்.

அதுக்குப் பிறகு சத்தியமான டாக்குத்தர் தனக்கு ஏன் சீற் தரோணும் எண்டு நீட்டி முழக்கியிருக்கிறார். தான் கட்சியை நம்பி, இருந்த டாக்குத்தர் வேலையையும் விட்டிட்டு வந்ததால தனக்குத்தான் சீற் வேணும் எண்டு கெஞ்சிக் கூத்தாடி இருக்கிறார். அதுக்குள்ள இன்னொரு தரப்பு 'டாக்குத்தர் மாவட்டத்தில விருப்பு வாக்கில கட்சிக்குள்ளையே அஞ்சாவதாத்தான் வந்தவர், அப்பிடியெண்டால் ரண்டாவதா வந்தவருக்குத்தான் குடுக்க வேணும். அதைவிட மன்னாரில இருந்து போட்டிபோட்ட இளம் லோயருக்கு குடுத்தா அவர் மன்னாரையும், வவுனியாவையும் பார்ப்பார். இளம் ஆள் எண்டதால கட்சிக்கும் பலப்பா இருக்கும். இல்லாட்டி பொம்பிளை ஒராளுக்கு குடுப்பம்' எண்டிருக்கினம். அதுக்குள்ள சாணக்கியனும், கலையரசனும் 'இனிமேல் அரசியலமைப்பு வேலையள் கனக்க இருக்கு. அதால சுமந்திரனைத்தான் தேசியப்பட்டியல் எம்.பி.யா போடோணும்' எண்டு அவையள் சொல்ல, 'அந்த வேலையளை எம்.பி.யா இருந்துதான் செய்யோணுமெண்டில்லை. அவர் வெளியில இருந்தும் செய்யலாமே' எண்டு இன்னும் சிலர் மறுத்தான் அடிச்சிருக்கினம். அதை சுமந்திரனும் 'வெளியில இருந்து என்ர சேவையை செய்யலாம்' எண்ட அந்த விசயம் அப்பிடியே அமந்திட்டுது.

ஆனால் சத்தியமான டாக்குத்தர் விடுறமாதிரி இல்லை. 'மன்னார் லோயர் இளம்பெடியன். அவருக்கு அரசியல் தெரியாது. அவர் எலக்சன் கேட்டு வெண்டு போறதுக்கு வயதும் இருக்கு. நான் வேலையையும் விட்டுட்டு நிக்கிறன்' எண்டு விடாப்பிடியா நிக்க, கடைசியா வேற வழியில்லாமல் அவருக்கே அந்த சீற்றை மனமில்லாமல் குடுத்திருக்கினம். வீட்டுக்கட்சிக்காரர் இவ்வளவு அடி விழுந்தபிறகும் திருந்தமாட்டினம் எண்டதுக்கு இந்த தேசியப்பட்டியல் சீற் விசயமே நல்ல உதாரணம். முகமே தெரியாத ஆக்களையெல்லாம் நிப்பாட்டி உந்தத் திசைகாட்டிக்காரர் வெண்டு காட்டின பிறகும், ஊழல் குற்றச்சாட்டு உள்ளவைக்கும், கட்சியைச் சீரழிச்சவைக்கும் தேர்தலில சனங்கள் வேண்டாமெண்டு அஞ்சாம் இடத்தில வைச்சிருக்கிறவைக்கும் தான் சீற் குடுப்பினமெண்டால், அடுத்த எலக்சனில இன்னும் சனங்கள் முறையாக் கவனிக்கத்தானே செய்வினம்?



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹாட்லியின் மைந்தர்களது நினைவாக குருதிக்கொடை முகாம் முன்னெடுப்பு!

யாழ்ப்பாணம், நவ.19

வடமராட்சி இன்பர்சிட்டி கடற் பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்த யாழ்.ஹாட்லிக் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்கள் நால்வரின் 25ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்றுவந்த வேளை ரயில் விபத்தில் சிக்கி உயிரிழந்த மாணவனது 20ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டும் குருதிக்கொடை முகாம் ஹாட்லிக் கல்லூரியின் மண்டபத்தில் நேற்றுத் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

ஹாட்லியின் மைந்தர்கள் நிதியத்தின் ஏற்பாட்டில், பருத்தித்துறை ஆதார மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவினரது அனுசரணையில் நடைபெற்ற குருதிக்கொடை முகாமில் கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட தன்னார்வ குருதிக் கொடையாளர்கள் பங்கேற்று குருதிக்கொடை வழங்கியிருந்தனர். (எ-45-100)



# சுற்றுலாப் பயணிகளுக்கு விலங்குகளால் தொல்லை

கொழும்பு, நவ.19

தற்போது நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் பல சுற்றுலாத் தலங்களில் விலங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதத்தில் மாத்திரம் ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 907 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. அத்துடன் இந்த மாதத்தின் கடந்த 10 நாள்களில் மட்டும் 61 ஆயிரத்து 767 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகளவான சுற்றுலாப்பயணிகள் வரும் காலிக் கோட்டையில் அதிகமான கட்டாக்காலி விலங்குகள் நடமாடுகின்றன என்றும், அதனால் அந்தப் பகுதிகளுக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-22)

# பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், நவ.19

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் அனுசரணையில் வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவை நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நாளை புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வலிகாமம் கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலாளரும், பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான சண்முகராசா சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷும், கௌரவ விருந்தினர்களாக ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் மற்றும் 2022 ஆம் ஆண்டின் மாகாண விருதுக் கலைஞர் கலைக்குரிசில் வடிவேலு பாலச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-22)

கர்நாடக சங்கீதப் போட்டியில் வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மாணவி சி.சிவகலை ஜாவளி தனி இசை கீழ்ப் பிரிவில் 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். (எ-ரி-159)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.19

யாழ்.பல்கலைக்கழக மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையினரின் ஏற்பாட்டில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் "ஐந்து நாடகங்கள்" நூல் வெளியீடு கலாநிதி.எஸ்.கே.கண்ணதாசன் தலைமையில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடக் கருத்தரங்கு மண்டபத்தில் நாளை புதன்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கலாநிதி பா.அகிலன், கலாநிதி ம.திருவரங்கன், ஜோண்சன் ராஜ்குமார் ஆகியோர் உரை ஆற்றவுள்ளனர். சோ.தேவராசா, கலாநிதி க.நவதர்ஷினி, கலாநிதி க.சிதம்பரநாதன், பேராசிரியர் க. ஸ்ரீகணேசன், ச.மார்க்கண்டு ஆகியோருக்கு சிறப்புப் பிரதிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

# யானை தாக்கி ஒருவர் மரணம்

பொலநறுவை, நவ.19

அரலகங்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்லேவெவ கும்புருயாயே பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அரலகங்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-25)

# ஹனுமத் ஜெயந்தி

யாழ்ப்பாணம், நவ.19

சுன்னாகம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா அடுத்த மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகி 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அடுத்தமாதம் 28 ஆம் திகதி சனிக்கிழமை இலட்சார்ச்சனை பூர்த்தி விழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேர் பவனியும், 30 ஆம் திகதி திங்கட்கிழமை ஹனுமத் ஜெயந்தியும் இடம்பெறுமென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-25)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாளாக அமையும். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாலையில் உற்சாகமாகக் காணப்படுவீர்கள்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக் கூடும். மாலையில் குடும்பத்துடன் உறவினர், நண்பர்கள் வீட்டுக்குச் சென்று வருவீர்கள்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச் செலவாக இருக்கும் என்பது ஆறுதல் தரும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும். மற்றவர்களுடன் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உங்கள் யோசனையை குடும்பத்தினர் ஏற்றுக்கொள்வார்கள்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக் கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**விருச்சிகம்:** தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து...

நீண்ட எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இலங்கையின் புதிய அமைச்சரவை நேற்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி ரணிலின் பாணியில் பாதுகாப்பு, நிதி உள்ளிட்ட அமைச்சுகளை ஜனாதிபதி அநுர கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றார். பிரதமராக ஹரிணி தொடர்கின்றார். எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று அவரிடம் இலங்கையின் கல்விக் கட்டமைப்பு ஒட்டுமொத்தமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. பேராசிரியர்கள், கல்விமான்கள், சட்டத்தரணிகள் என ஒப்பீட்டளவில் நம்பிக்கை தரக்கூடிய வெறும் 21 பேரைக் கொண்ட மிகச் சிறிய அமைச்சரவையாக இந்த அமைச்சரவை அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் காலத்தில் உலகின் மிகப்பெரும் அமைச்சரவையில் ஒன்றாக இலங்கையின் அமைச்சரவை அமைந்திருந்தது. வெறும் இரண்டரைக் கோடி மக்கள் வாழ்கின்ற நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இது போதாதென்று இராஜாங்க அமைச்சர்கள் என வெள்ளை யானைக்குத் தீனி போடுவதைப்போன்று அமைந்த அந்த அமைச்சரவை, இலங்கையின் பொருளாதாரத்தை ஏகப்பட்டதாக தன்னிஷ்டப்படி உறிஞ்சித் தள்ளியது. மக்களின் வரிப்பணத்தின் பெருந்தொகை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் பராமரிப்புக்காக கொட்டித் தீர்க்கப்பட்டன. திறமையற்றவர்களுக்கு அமைச்சுக்களை வழங்காமல், விசுவாசிகளைத் திருப்திப்படுத்தும் நோக்கில் அமைச்சுகளை வழங்கியதால் அத்தகையதொரு வினையை இலங்கை அறுவடை செய்துகொண்டிருந்தது. காலப் போக்கில் ஏற்பட்ட பொருளாதார நலிவு நிலைக்கும் அதுவும் ஒரு காரணமானது. இப்படிப்பட்டதொரு கசப்பான அரசியல் கலாசாரம் கொண்ட இலங்கையில்தான், இப்போது வெறும் 21 அமைச்சர்கள் போதும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. பிரதி அமைச்சர்களாக சிலர் நியமிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. ஆனால், இராஜாங்க அமைச்சர்களாக எவரும் நியமிக்கப்படமாட்டார்கள். அப்படியொரு வகையே இனி இந்தத் தீவில் இல்லை என்று ஜனாதிபதி அநுர திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார். எல்லாவற்றையும் விட நேற்றுப் பதவியேற்ற அமைச்சரவையில் இரண்டு மலையகத் தமிழர்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றனர். இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக தேசியப் பட்டியலில் மாற்றுத்திறனாளி ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக தேசிய மக்கள் சக்தியால் பெயரிடப்பட்டிருக்கின்றார்.

ஒட்டுமொத்த அமைச்சரவைக்கும் மணிமுடி வைத்தாற்போல், கைகளில் குருதிக் கறைபடிந்த எவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை. உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள அமைச்சர்களுக்கும் இலங்கையின் அமைச்சர்களுக்கும் இடையில் இருந்த கல்வித்தர இடைவெளி குறைக்கப்பட்டிருக்கின்றது. ஒரே வரியில் சொல்வதானால், மக்கள் எதிர்பார்த்த மாற்றமும் அமைச்சரவை நியமனத்துடன் ஆரம்பித்திருக்கின்றது. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல் என்கின்றது வள்ளுவம். அந்தக்கூற்றுக்கு இலக்கணமான முறையில் அமைந்திருக்கும் இந்த அமைச்சரவையின் செயற்பாட்டு வீச்சு எவ்வளவு தூரம் வெற்றிகரமாக அமையப்போகின்றது என்பதே தற்போதுள்ள கேள்வி. மாற்றம் புறத்தோற்றத்தில் இல்லாமல் உள்ளகக் கட்டமைப்பிலும் அதாவறு செயற்றிறனிலும் ஏற்படும் பட்சத்தில் நிச்சயம் மகிழ்ச்சியே.



# அமைச்சரவை நியமனத்தின் பின் அரச உயர் பதவிகளில் மாற்றம்!

கொழும்பு, நவ.19

புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்ட பின்னர், அரச உயர் பதவிகளிலும் மாற்றங்கள் ஏற்படலாம் என ஜனாதிபதி செயலக உயரதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக உத்தியோகபூர்வ அறிவித்தல் எதுவும் ஜனாதிபதியிடம் வரவில்லை எனவும், ஆயினும் சில அரச நிர்வாகக் கட்டமைப்புகளில் மாற்றங்கள் செய்யப்படலாம் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். அதேவேளை, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் வழங்கப்பட்ட நியமனங்களில் எதுவித மாற்றமும் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-6)

## மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க சட்டமா அதிபரின் ஆலோசனை

கொழும்பு, நவ.19

மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையை தேசிய மருந்து வழங்கல் அதிகாரசபை கோரியுள்ளது. உள்ளூர் மருந்து விநியோகஸ்தர்கள் கேள்விப்பத்திரம் கோரும் நடைமுறையை ஏற்க மறுத்து வெளிச் சந்தை விலைக்கே மருந்து வகைகளை விநியோகிப்போம் என அடம்பிடிப்பதே மருந்துத் தட்டுப்பாட்டுக்குக் காரணம் எனவும் இதனால் சட்டமா அதிபரின் ஆலோசனை நாடப்பட்டுள்ளது என்றும் தேசிய மருந்து வழங்கல் அதிகாரசபை தலைவர் மருத்துவர் ஆனந்த விஜயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

சில அத்தியாவசிய மருந்து வகைகளுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்வதில் சட்டச் சிக்கல் உள்ளது என்றும், பெரும்பாலான அத்தியாவசிய மருந்து வகைகள் கையிருப்பில் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-6)

## ஜப்பான் போர்க்கப்பல் இலங்கையில்

கொழும்பு, நவ.19

சமிதாரே என்ற ஜப்பானிய போர்க்கப்பல் நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. 151 மீற்றர் நீளமான இந்தக் கப்பலில் 199 மாலுமிகள் பணிபுரிகின்றனர், கப்டனாக நயோகி கொகா கடமையாற்றுகிறார். இன்று செவ்வாய்க்கிழமை வரை இந்தக் கப்பல் இலங்கையில் தரித்து நிற்கும். கப்பல் தரித்து நிற்கும் காலத்தில் இருநாட்டு கடற்படையினரும் இணைந்து கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளனர். (எ-6)

## தேர்தல் திகதிகளை நாடாளுமன்றே தீர்மானிக்கும்

கொழும்பு, நவ.19

உள்ளூராட்சி, மாகாணசபை தேர்தல்கள் தொடர்பான திகதிகள் இரு தேர்தல்கள் பற்றிய நாடாளுமன்ற வாக்கெடுப்பு முடிவடைந்ததும் தீர்மானிக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார். இரு தேர்தல்களுக்கும் உரிய நிதி ஒதுக்கப்படவேண்டும். நிதி ஒதுக்கீடு பூர்த்தியானதும் தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது என்பதை நாடாளுமன்றமே தீர்மானிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். (எ-6)



## வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கு விசேட வசதி

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் வசதிக்காக வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்க ளில் இருந்து பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் நகல்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி இதன்முன்னோடித் திட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட 7 வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகப் பொது அலுவலகங்கள் ஊடாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. குவைத், ஜப்பான், கட்டார், அவுஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்ன், கனடாவின் டொரண்டோ, இத்தாலியின் மிலன் மற்றும் டுபாயில் உள்ள தூதரகங்களின் மூலம் இந்த முன்னோடித் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. (ச-இ)

## நாளை

20.11.2024

புதன்கிழமை - கார்த்திகை - 05

சுபநேரம் : 04.39 - 06.09

ராகுகாலம் : 12.09 -01.39

## நாளொரு நல்வார்த்தை

"மரங்களைக் காற்றைச் சலவை செய்யும் இயந்திரங்களாகவும் குளிர்விக்கும் பதனப்படுத்திகளாகவும் சொல்லித்தரும் அறிவியலும், உயிர்காக்கும் மரங்களைப் பணங்காய்ச்சி மரங்களாகப் போதிக்கும் பொருளியலும் ஆதிக்கம் பெற்றுள்ள நிலையில் மரங்களுக்கும் எமக்கும் இடையிலான பண்பாட்டு உறவை மீட்டுருவாக்கம் செய்வது அவசியம் ஆகும். இந்தப் பண்பாட்டு உறவே மரங்கள் மீதான பற்றுதலை வளர்க்கும்."

-பொ. ஐங்கரநேசன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் பிரதிநிதித்துவம் இம்முறை அங்கீகாரம்

### நிலாந்தி கோட்டஹாச்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.19

இலங்கையிலுள்ள வாக்காளர்கள் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் சித்தாந்தத்தை மதித்து அங்கீகரித்துள்ளனர் என்று தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் நிலாந்தி கோட்ட ஹாச்சி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நாட்டின் சட்டங்களும் கொள்கைகளும் தொகுக்கப் படும் இடம் நாடாளுமன்றமாகும். அத்துடன் பொருளா தாரம் மற்றும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் இடமும் நாடாளுமன்ற மாகும்.

இந்த நிலையில் நாடாளுமன்றத்திலும், உள்ளூராட்சி மட் டத்திலும்கூட அதிகமான பெண்களை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்ற சித்தாந்தம் இருந்து வந்தது.

இந்த சிந்தாந்தத்தை இலங்கை மக்கள் இந்த ஆண்டு பொதுத் தேர்தலில் அங்கீகரித்து, அதிக பெண்களை நாடா ளுமன்றத்துக்கு தேர்ந்தெடுத்துள்ளனர் - என்றார். (ச-இ)

## பொல்லால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

கொழும்பு,நவ.18

புத்தளம், சாலியவெவ பிரதேசத் தில் உள்ள வீடொன்றில் பொல் லால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக சாலியவெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. கொலை செய் யப்பட்டவர் 35 வயதுடையவரா வார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர் பில் 23 மற்றும் 24 வயதுடைய இளைஞர்கள் இருவர் கைதுசெய் யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## ஐஸ் போதையுடன் ஒருவர் கைது

கொழும்பு,நவ.19

பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட் பட்ட வனவாசல பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கடந்த சனிக்கிழமை பொலி ஸாரால் கைது செய்யப்பட்டார்.

பேலியகொட பொலிஸ் நிலைய அதி காரிகளுக்கு கிடைத்த இரகசிய தக வலையடுத்து மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போதே அவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் வத் தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடையவராவார்.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து 10 கிராம் 500 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (ச-இ)

## சொகுசு வாகனம் மற்றொன்று மீட்பு

கொழும்பு, நவ.19

சட்டவிரோதமானது எனச் சந்தேகிக்கப்படும் மற்று மொரு நவீன சொகுசு பாதுகாப்பு வாகனமொன்று, கண்டி தலைமையகப் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட வாகனம் கண்டியிலுள்ள பிரபல மீன் விற்பனை வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமானது என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபருக்கு நேரடியாக வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், இந்த வாகனம் கைப் பற்றப்பட்டுள்ளது. (ச-இ)

## மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, நவ.19

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன் மேல், மத்திய, சப்ரகமுவ, தென், ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களில் மாலையில் அல்லது இரவில் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச-இ)

# பரீட்சை நிலையங்களில் அலைபேசிக்குத் தடை!



கொழும்பு, நவ.19

இம்முறை, கல்விப் பொதுத ராதர உயர்தர பரீட்சை நடைபெறும் பரீட்சை நிலையங்களுக்குள், உதவி அதிபர் உட்பட கண்காணிப்பு ஆசிரி யர்களுக்கு அலை பேசிகளை எடுத்துச் செல்லத் தடை விதிக் கப்பட்டுள்ளது.

பரீட்சை மையத்தின் நிலைய அதிகாரி மற்றும் மேல திக கண்காணிப்பாளர் மட்டுமே அலைபேசிகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

கடந்த காலங்களில் எழுந்த பிரச்சினைகள் காரணமாக, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், பரீட்சைக் காலத்தில் தேர்வு கண்காணிப்பும் பலப்ப டுத்தப்பட்டுள்ளது. அதன்படி, பரீட்சைத் திணைக்கள உத்தி யோகத்தர்களுக்கு மேலதிகமாக, மாகாண மற்றும் பிராந்திய அலுவலகங்களின் அதிகாரிகளும் கண்காணிப்பில் ஈடுபடுத் தப்படவுள்ளனர். (ச-இ)

# மலையகத்துக்கான தடைகள் உடைந்தன

### நாடாளுமன்றத்துக்குத் தெரிவான அம்பிகா தெரிவிப்பு



கொழும்பு, நவ.19

பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த இளைஞர்கள், காலாவதியான கட்டமைப் புக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில் பெருந்தோட்ட சமூகம் மற்றும் அதற்கு அப்பால் சென்று இளைஞர்கள் அரசிய லில் தீவிர பங்கு வகிக்கும் திறன் குறித்து நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

- இவ்வாறு பெருந்தோட்ட சமூ கத்தின் பிரதான அரசியல் கட்சி யொன்றின் மூலம் முதன் முறையாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பெண்களில் ஒருவ ரான அம்பிகா சாமுவேல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது அரசியல் பிரவேசம், வெறும் தனிப்பட்ட சாதனையல்ல, குறிப்பாக மற்றவர்களுக்கு ஒரு படிக்கல் .

மகத்தான திறமை மற்றும் நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற உண்மையான ஆசை கொண்ட இளைஞர்கள் நீண்ட காலமாக, சில வரம்புகளுக்குள் சிக்கிக் கொண்டிருந்தனர். ஆனால் தற்போது அந்தத் தடைகள் உடைக்கப்பட்டுள்ளன. எனவே மலையகத்தில் இருந்தும் பிற மாவட்டங்களிலிருந்தும் ஒரு புதிய தலைமைத்துவ அலை உருவாகும் . அரசியலில் நாம் எடுத்துள்ள முதல் அடியின் மூலம், நாடாளுமன்றத்திலும் அதற்கு அப்பாலும் அதிகமான பெண்கள் தலைமைப் பதவி களுக்கு உயர்வதை சந்தேகத்துக்கிடமின்றி பார்க்கமுடியும் - என்றார். (ச-இ)

# பட்டியலில் உள்ளோருக்கே தேசியப்பட்டியல் ஆசனம்

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, நவ.19

வேட்பாளர் பட்டியலில் உள்ளடங்காதவர்களின் பெயரை தேசியப்பட்டியலில் தெரிவுசெய்ய முடியாது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் தேசியப்பட்டியலில் பெயரிடப்பட்டுள்ளவர் களைத் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பின ராகக் கட்சியின் செயலாளரினால் தெரிவு செய்ய முடியும்.

அவ்வாறில்லையெனின் அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஒரு மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வி யுற்ற, தமது கட்சியின் வேட்புமனுவிலுள்ள ஒரு வரை தேசியப்பட்டியல் உறுப்பினராகத் தெரிவு செய்ய முடியும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித் துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தி வாசிக்கவும்

18.11.2024 ம் திகதி உதயன் பத்திரிகையின் பக்கம் 08 இல் பிரசுரமாகிய சாவகச்சேரி பனை தென்னை வள அபி.கூ. சங்கத்தின் கிராமிய வங்கி எழுதுநர் பதவி வெற்றிடம் தொடர்பான விளம்பரத்தின் அ பிரிவின் (11) இல் கூட்டுறவு ஊழியர் 13வது சம்பளத் திட்டத்தில் கணினிப் பக்க உருவாக்குநர் பதவியில் 04 வருட அனுபவம் எனக் குறிப்பிடப்பட்டுவிட்டது. இதனை 02 வருட அனுபவம் என திருத்தி வாசிக்கவும்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
பொதுமுகாமையாளர்.

STP® Your Partner in IT Solution

49,1st Cross Street, Jaffna
T.P: 0212222674

## VACANCY: HARDWARE TECHNICIAN

வடபுலத்தில் கணினித்துறையில் 25 வருடங்களாக வாடிக்கையாளரது நம்பிக்கையை வென்ற STP கணினி நிறுவனத்தில் தொழில்நுட்ப பணியாளராக அல்லது பயிலுநராக இணைந்து கொள்ள தங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

* தகைமை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் உடையோர் விண்ணப்பிக்க முடியும்.-முன்அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்
* EPF, ETF உடன் கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும். ஆர்வமுடையோர் தங்கள் சுயவிபரக் கோவையை info@stpjaffna.com எனும் மின்னஞ்சலுக்கு அல்லது மேலுள்ள முகவரிக்கு 7 நாட்களுக்குள் அனுப்புமாறு அல்லது நேரில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான பாதீடு மக்கள் பார்வைக்கு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு வரைபு தயாரிக்கப்பட்டு 2024 நவம்பர் 19 ஆம் திகதியிலிருந்து 2024 டிசம்பர் 02 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள், சபையின் நூலகங்கள்,சனசமூக நிலையங்கள் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் என்பவற்றில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தயானந்தன் தர்சினி**
**செயலாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**

# ஆதரவளித்தவர்களை கட்சியில் இணைப்பதற்கு ரணில் முயற்சி

தனது ஆட்சியின்போது அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த உறுப்பினர்கள் சிலரை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார் எனத் தெரியவருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைக்கும் நடவடிக்கையின் ஓரங்கமாக இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, காஞ்சன விஜேசேகர ஆகியோர் ரணிலின் அழைப்புத் தொடர்பில் சாதகமாகப் பரிசீலித்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை சிலிண்டர் கூட்டணிக்கு கிடைக்கப்பெற்றுள்ள இரு தேசியப் பட்டியல்களில் ஒன்றை முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும், மற்றும் ஒன்றை ஐ.தே.க. உறுப்பினர் ஒருவருக்கும் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(எ-44)

## வலி கிழக்கு வடபகுதி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் அச்சுவேலி (வ-து)
## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவங்களை சங்க வேலை நாட்களில் தலைமைகாரியாலயத்தில் ரூ.20ஐ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர். வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் அச்சுவேலி. பருத்தித்துறை வீதி. ஆவரங்கால். புத்தூர் என்ற முகவரிக்கு 07.12.2024ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும்.

**பதவி : விற்பனை உதவியாளர்**


1. சம்பள குறியீட்டு இலக்கம் :308/17 (கூ.வே.ஆணைக்குழு சு.நி.இல.02/2022 இன் படி)
2. சம்பள அளவுத்திட்டம் :16515---- 130X10 (சுற்று நிருப இல. 02/2022 இன் படி)
   19265----145X10
   (இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் இதரபடிகளும் வழங்கப்படும்)
3. வெற்றிடங்களின் எண்ணிக்கை : 10
4. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் : கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் அல்லது 08ந் தர கல்விச்சான்றிதழ்

**பொது நிபந்தனைகள்**

1. விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவர்களாயும் 45 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள். வயது. வதிவிடத்தை உறுதிப்படுத்துதல் நற்சான்றிதழ்.தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. நியமனத்தின் போது சுற்றுநிருபத்திற்கமைவாக ரொக்கப்பிணை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.
4. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
5. சங்கப்பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்** **19.11.2024**
**வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்**
**அச்சுவேலி.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



தோற்றம் 25 • 09 • 1938

மறைவு 21 • 10 • 2024

**கடந்த 21.10.2024 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்**

## சங்கரப்பிள்ளை செல்வரத்தினம்

**(முன்னாள் வடபிராந்திய முகாமையாளர் தேசிய லொத்தர் சபை)**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (20.11.2024) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும். கண்ணீர் அஞ்சலி. தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும். பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும். உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைக்

**31, கொண்டலடி வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**
**070 463 7710**

(CS/1893) J-1

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 • 02 • 1952

மறைவு 29 • 11 • 2015

## திருமதி தர்மலக்ஷ்மி சூரியகுமார்

### திதி : சங்கடகர சதுர்த்தி

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடைமை போதித்து பக்குவமாய் பாரினிலே
வாழ வழி நடத்தினீர்கள் அம்மா
ஆதரவற்றோருக்கு உதவிட வேண்டுமென
அறவழி காட்டினீர்கள் அம்மா
நீங்கள் எம் கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் நினைவுகளில் என்றும் நிலையாய்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள் அம்மா

**என்றும் உங்கள் நினைவுடனேயிருக்கும்**

**72, அச்சுக்கூட வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**ந. சூரியகுமார் (கணவர்)**
**மக்கள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்.**

(CS 56696 ) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த தேர்தல்களை ஆராய கூடுகிறது தேர்தல்கள் ஆணைக்குழு



கொழும்பு, நவ.19

**மாகாணசபை மற்றும் உள்ளூராட்சிச்சபைத் தேர்தல்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கலந்துரையாடவுள்ளது.**

எதிர்வரும் 27ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழு கூடவுள்ள நிலையில், அதில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாகவே இந்தச் சந்திப்பில் அதிக கவனம் செலுத்தப்படும் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

## தேசியப்பட்டியலில் ரவி கருணாநாயக்க

கொழும்பு, நவ.19

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்லவுள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

பொதுத்தேர்தலில் 'சிலிண்டர்' சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜனநாயக முன்னணிக்கு கிடைத்த இரண்டு தேசியப்பட்டியல் ஆசனங்களில், ஒரு தேசியப்பட்டியல் ஆசனத்துக்கு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மற்றைய தேசியப்பட்டியல் ஆசனம் தொடர்பாக உரிய நேரத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படும் என்றும் அந்தத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (எ-இ)

## சுற்றுலாவிகள் இலக்கை இலங்கை அடையும்

கொழும்பு, நவ.19

இந்த ஆண்டு இறுதிக்குள் இலக்கிடப்பட்ட 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகையை இலங்கை அடையும் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் அறுகம்பே பிரதேசத்துக்கு விடுக்கப்பட்டிருந்த பயண எச்சரிக்கையை அடுத்து இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்திருந்தது. ஆயினும் ஒப்பீட்டளவில் இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



## வீதி விபத்தில் இருவர் காயம்

கிளிநொச்சி, நவ.19

ஏ-35 பிரதான வீதியில் தர்மபுரம் பொலிஸ் நிலையம் முன்பாக நேற்று திங்கட்கிழமை நடந்த வீதி விபத்தில் இருவர் படுகாயம் அடைந்தனர். பரந்தன் பகுதியில் இருந்து புதுக்குடியிருப்பை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும், விசுவமடு பகுதியில் இருந்து தர்மபுரம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் வீதியின் குறுக்கே திரும்ப முற்பட்ட வேளை பரந்தன் பகுதியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நடந்துள்ளது.

இருவர் படுகாயம் அடைந்த நிலையில் தர்மபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-45-113)

## ரவியின் நியமனத்துக்கு ரணில் கடும் எதிர்ப்பு!

கொழும்பு, நவ.19

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு ரவி கருணாநாயக்கவின் பெயர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், கட்சிகளின் எந்த ஒப்புதலும் இல்லாமல் தன்னிச்சையான முறையில் இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது என்று புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் பிரதிநிதிகளுக்கு தெரிவித்துள்ளார்.

புதிய ஜனநாயக முன்னணிக்குச் சொந்தமான இரண்டு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகள் தொடர்பில் அந்த முன்னணியின் அனைத்துக் கட்சிகளும் இன்று காலை கொழும்பில் கூடி முடிவெடுக்கவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரவி கருணாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் என்பதுடன், கூட்டுத் தீர்மானமின்றி செயற்படும் திறன் அவருக்கு இல்லை எனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஜனநாயக முன்னணியின் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் சந்தித்து இரண்டு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகள் தொடர்பில் உத்தியோகபூர்வ தீர்மானம் எடுக்கவுள்ள நிலையில், இவ்வாறான தன்னிச்சையான செயற்பாட்டை அங்கீகரிக்க முடியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-இ)

## லொஹானுக்கும் மனைவிக்கும் மறியல் நீடிப்பு

கொழும்பு, நவ.19

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே மற்றும் அவரது மனைவி ஆகியோர் முறையே டிசெம்பர் 2 மற்றும் நவம்பர் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் நேற்று நுகேகொட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நுகேகொட, மிரிஹான பிரதேசத்தில் உள்ள அவரது மனைவியின் வீட்டில் பதிவு செய்யப்படாத கார் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்தே முன்னாள் அமைச்சரும், அவரது மனைவியும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (எ-இ)

## கால்துடைப்பான் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், நவ.19

வடக்கு மாகாணத் தொழிற்றுறைத் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் 2024 ஆம் ஆண்டுக்கான உயர்தொழில்நுட்பப் பரிமாற்றப் பயிற்சியின் கீழ் கால்துடைப்பான் தயாரித்தல் பயிற்சிநெறியானது ஜே/189 இணுவில் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி-66)



## ரவி செனவிரத்னவின் மனு நிராகரிப்பு

கொழும்பு, நவ.19

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரும், தற்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான ரவி செனவிரத்னவால் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

வாகன விபத்தொன்று தொடர்பாக வெள்ளவத்தைப் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டதன்மூலம் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று உத்தரவிடக்கோரி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

உயர்நீதிமன்ற விதிகளுக்கு அமைய இந்த மனுத் தாக்கல் செய்யப்படவில்லை என்று பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான பிரதி மன்றாடியார் நாயகத்தால் ஆட்சேபனை முன்வைக்கப்பட்டதை அடுத்து, இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கட்சி – ஐ.ம.சக்தி இணைவுப் பேச்சு விரைவில்

கொழும்பு, நவ.19
ஐக்கிய தேசியக் கட்சியையும், ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றிணைப்பதற்குரிய பேச்சுகள் அரசியல் களத்தில் விரைவில் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரியவருகின்றது.
ஐ.தே.க.வில் இரு இணைத் தலைமைப் பதவிகளை உருவாக்கி ஒன்றை சஜித்துக்கும், மற்றொன்றை ருவான் விஜேவர்த்தனவுக்கும் வழங்குவது தொடர்பாகவும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. எனினும், கட்சியின் அதிஉச்ச தலைவர் பதவியை உருவாக்கி, அதனை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதால் இணைவு சாத்தியப்படுமா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.
ஆனால் ஐ.தே.க.வும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்தால் மாத்திரமே அடுத்த ஐந்தாண்டுகளில் ஆட்சியைப் பிடிப்பது பற்றிச் சிந்திக்கலாம், அவ்வாறு இல்லையேல் நாமல் ராஜபக்சவுக்கான வாய்ப்பே அதிகரிக்கும் என இரு கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.
ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணையவேண்டும் என சஜித் தரப்பில் வலியுறுத்திவரும் அரசியல் பிரமுகர்கள் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-44)

# ஒற்றையாட்சிக்கு வடக்கில் சமிக்ஞை

## விமல் வீரவன்ச கூறுகின்றார்



கொழும்பு, நவ.19
**தேசிய மக்கள் சக்திக்கு வடக்கில் இருந்து கிடைத்துள்ள ஆதரவானது இனவாதத்துக்கு எதிரானது மட்டுமல்ல பிரிவினைவாதத்துக்கும் எதிரானது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–
பிரிவினைவாதத்துக்கு சார்பாகச் செயற்பட்டுவந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு பதிலாக, தேசிய மக்கள் சக்திக்கு வடக்கில் ஆதரவளிக்கப்பட்டுள்ளது. இனவாதம் மற்றும் பிரிவினைவாதத்துக்கு தாம் எதிரானவர்கள் என்ற செய்தியை இதன்மூலம் மக்கள் வழங்கியுள்ளனர். ஒற்றையாட்சிக்குள் அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை கிட்டும் வகையிலான பயணம் தொடர வேண்டும் என்பதற்குரிய ஆணையே இந்த அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
நாட்டுக்கான எமது பொறுப்பை நாம் என்றும் கைவிடப்போவதில்லை. அந்தப் பயணம் தொடரும். பிரபுக்கள் அல்லாத தரப்புகள் வசம் ஆட்சி சென்றுள்ளது. அதை வரவேற்கின்றோம். டயஸ்போராக்கள் மற்றும் அந்நிய சக்திகளின் நிபந்தனைகளுக்கு அடிபணியாமல் பயணித்தால் ஆதரவளிக்கப்படும். அவ்வாறு இல்லையேல் அதற்கு எதிராக மக்களை அணிதிரட்டுவோம் என்றார். (எ-44)

# தோல்விக்கான காரணத்தை மறைக்கும் ஐ.ம.சக்தி

கொழும்பு, நவ.19
ஐக்கிய மக்கள் சக்தியின் தோல்விக்கான சில காரணங்களை வெளியிடமுடியாது என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார். எங்கள் தோல்விக்கான சில காரணங்களை மூடிய கதவுகளுக்குப் பின்னால் கட்சியின் மற்ற உறுப்பினர்களுடன் மட்டுமே கலந்துரையாடுவோம் என்று அவர் தெரிவித்துள்ளார். கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ ஏன் பொதுமக்களிடம் இருந்து விலகி நிற்கிறார் என்று கேட்டபோது, சரியான நேரத்தில் பிரேமதாஸ பொது வெளியில் வருவார் என்றும் மரிக்கார் தெரிவித்துள்ளார். (எ-இ)

# அமெரிக்க ஏவுகணைகளால் ரஷ்யாவைத் தாக்க அனுமதி

## பைடன் வழங்கினார்

வொஷிங்டன், நவ. 19
அமெரிக்க ஏவுகணைகளைப் பயன்படுத்தி ரஷ்யாவுக்குள் தாக்குதல் நடத்துவதற்கு உக்ரைனுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
அமெரிக்க ஏவுகணைகளைப் பயன்படுத்தி ரஷ்யாவுக்குள் தாக்குதல் நடத்த அனுமதிக்குமாறு உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி நீண்டகாலமாக கோரிக்கையை முன்வைத்து வந்தார். கடந்த மூன்று மாதங்களாக முன்னெடுக்கப்பட்ட பரிசீலனைகளின் அடிப்படையிலேயே தற்போது இந்தக் கோரிக்கை பைடன் நிர்வாகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
எனினும் ரஷ்யாவின் குர்க்ஸ் பிராந்தியத்தில் மட்டுமே இந்தத் தாக்குதல்களை உக்ரைன் மேற்கொள்ளவேண்டும் என்றும், குர்க்ஸ் பிராந்தியத்துக்கு வெளியில் அமெரிக்க ஏவுகணைகளைப் பயன்படுத்தக்கூடாது என்றும் உக்ரைனுக்கு கண்டிப்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
குர்க்ஸ் பிராந்தியம் உக்ரைனால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் பிராந்தியத்தைத் தொடர்ந்தும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தால்தான், ரஷ்யாவைப் போர் நிறுத்தத்துக்குக் கொண்டுவர முடியும் என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பைடன் நிர்வாகம் அறிவித்துள்ளது. (ம)

# ஐ.தே.கட்சி விரும்பினால் கூட்டணி அமைக்கலாம்

## ஐ.ம.சக்தியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு



கொழும்பு, நவ, 19
ஐக்கிய தேசியக்கட்சி தேவை ஏற்படின் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கூட்டணி அமைக்கலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.
கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைவதற்குரிய சாத்தியம் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–
இணைவதற்குரிய அழைப்பை ஐக்கிய தேசியக்கட்சி எமக்கு அதிகாரபூர்வமாக விடுக்கவில்லை. எமது பக்கமே 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். எனவே, ஐ.தே.கட்சி வேண்டுமானால் எம்முடன் கூட்டணி அமைக்கலாம். பொதுத்தேர்தலில் தோல்வி அடைந்தவர்களுக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குவது தொடர்பில் தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை. தேசியப் பட்டியல் ஊடாக எவரை நியமிப்பது என்பது தொடர்பில் ஆராய்ந்து விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் – என்றார். (எ-25, 44)

## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி பெனடிக்ரா மரியாம்பிள்ளை தி.கு**
சில்லாலையைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி பெனடிக்ரா மரியாம்பிள்ளை தி.கு அவர்கள் கடந்த 16.11.2024 சனிக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.
அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (20.11.2024) புதன்கிழமை பி.ப 4.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்
மாகாணத் தலைவி.
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(CS/56706) J-1

# ஐ.ம.சக்தி தலைமையில் மாற்றம் ஏற்படவேண்டும்

## பொன்சேகா கூறுகின்றார்

கொழும்பு, நவ.19
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப்பதவிக்கு பிறிதொருவரை நியமிக்கவேண்டும் என்று அந்தக் கட்சியின் முன்னாள் தவிசாளர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். கட்சித் தலைவரின் பலவீனம் காரணமாகவே ஐக்கிய மக்கள் சக்தியை விட்டு வெளியேற நேரிட்டது என்றும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் மட்டும் அல்ல ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப்பதவியிலும் மாற்றம் அவசியம் என்றும் பொன்சேகா தெரிவித்துள்ளார்.
அதேவேளை, கட்சித் தலைமைப் பதவியில் மாற்றம் செய்யப்படமாட்டாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார். (எ-25-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூரை திருத்தம்

இல.19/3, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளியில் அமைந்துள்ள ஜெய்ப்பூர் நிறுவனத்தின் கூரை கழற்றி திருத்தம் செய்வதற்கு கூறுவிலை கோரப்படுகின்றது.
பார்வையிடும் நேரம் : 8.30 - 5.00
(திங்கள் - வெள்ளி)

(cs.56703) (N-1) செயலாளர்.


# சமநிலையான அணுகுமுறைகளை நாணய நிதியம் பின்பற்ற வேண்டும்

கொழும்பு, நவ. 19

பொதுமக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை கவனத்திலெடுக்கும் சமநிலையான அணுகுமுறைகளை சர்வதேச நாணயநிதியம் பின்பற்றவேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவினருடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்தே ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் வெற்றியானது தற்போதுள்ள ஆட்சியின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதில் தங்கியுள்ளது. மக்கள் ஆணைக்கு அமைய செயற்படுவது எனது ஆட்சியின் பொறுப்பு.

மக்களின் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு சமநிலையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்குமாறு சர்வதேச நாணய நிதியத்தை நாம் கோருகின்றோம். எனது தலைமையின் கீழ், சிறுவர் வறுமை மற்றும் போசாக்கின்மை போன்ற அத்தியாவசிய நலன்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சமூக சேவைகளுக்கான ஒதுக்கீடுகள் திறம்பட பயன்படுத்தப்படும்.

ஊழலை எதிர்த்துப் போராடுவதில் நானும் எனது அரசாங்கமும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். அந்த செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் வகையில் எமது செயற்பாடுகள் அமையும் - என்றார். (ம-இ)


## பெறுகைகளுக்கான அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்கான பெறுகை - 2024/2025

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்குத் தகைமையுள்ள விலை மனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01 | H/LS/2024/01 தொடக்கம் 10வரை | அழுக்குதுணிகள் சலவைச் சேவை | (அ) பருத்தித்துறை பிரதேசத்திற்குட்பட்ட ஆதார வைத்தியசாலை, பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 10,000.00 |
| | | | (ஆ) சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சை கூடம் | 10,000.00 |
| | | | (இ) கோப்பாய், அச்சுவேலி, பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் | 3000.00 |
| | | | (ஈ) நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில், பிரதேசத்திற்குட்பட்ட, பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு நிலையங்கள் (PMCU) | 3,000.00 |
| | | | (உ) காரைநகர் பிரதேச வைத்தியசாலை | 3,000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.
02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலை மனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
    அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கல் சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    இ. அத்துடன். வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்..
03. ஒப்பந்த அளிப்பிற்குத் தகைமை பெறுவதற்கு விலை மனுதாரர்கள் பகுதி 2 – பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. சுகாதாரக் கிராமம். பண்ணை யாழ்ப்பாணம்** எனும் முகவரியிலும் 021 222 3725, 021 222 6253, 021 221 4966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இம் முகவரியில் வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தமிழ் மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை. சுகாதாரக் கிராமம். பண்ணை யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் 19 நவம்பர் 2024 ஆம் திகதி தொடக்கம் 29.11.2024 ஆம் திகதி வரை 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரையான காலப்பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 1,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
06. பெறுகை ஆவணங்கள் 29 ஆம் திகதி நவம்பர் 2024 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 25 ஆம் திகதி நவம்பர் 2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.
08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் அலுவலக காசாளரிடம் அல்லது வங்கியில் செலுத்தி அவ்வாவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
09. இவ்விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனு கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்,**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966**
**தொலைநகல்: 021-222-9971**
**மின்னஞ்சல்: rdhsjaffna 15@gmail .com**

(cr.43731) (N-1)


# தேர்தல் ஆணையாளர் மீது கறுப்புமை ஊற்றித் தாக்கு!

மொஸ்கோ, நவ. 19


ஜோர்ஜியாவின் தலைமைத் தேர்தல் ஆணையாளர் மீது கறுப்புமை ஊற்றப்பட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஜோர்ஜியாவில் நடைபெற்ற தேர்தலில், ரஷ்ய ஆதரவு நிலைப்பாடு உடைய ஜோர்ஜியன் ட்ரீம் கட்சி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே, எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அனைவர் முன்னிலையிலும் தலைமை தேர்தல் ஆணையர் ஜியோர்ஜி மீது கறுப்புமை ஊற்றித் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, தாக்குதல் நடத்தியவர் பொலிஸாரால் சுற்றி வளைத்துக் கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அத்துடன், தலைமைத் தேர்தல் ஆணையாளர் மற்றும் தேர்தல் திணைக்களப் பிரதானிகளின் பாதுகாப்பு அங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு உள்ளது என்று தெரிவித்துள்ள எதிர்க்கட்சியினர், தேர்தல் முடிவுகளை ஏற்க மறுத்து ஜோர்ஜியாவின் பல பகுதிகளிலும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். தேர்தல் திணைக்கள அலுவலகத்தை அவர்கள் முற்றுகையிட முனைந்ததையடுத்து, திணைக்களம் உள்ள பகுதிகளில் காரணமின்றி நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோப்பாயில் நாளை பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், நவ. 19

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கோப்பாய் பிரதேச செயலகம் ஆகியவற்றின் அனுசரணையில் கோப்பாய் பண்பாட்டுப் பேரவை நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

புத்தூர் சிறி சோமாஸ்கந்தாக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் கோப்பாய்ப் பிரதேச செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் இந்தப் பண்பாட்டுப் பெருவிழா நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராகவும், வடமாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ் சிறப்பு விருந்தினராகவும், யாழ். புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் மற்றும் கலைஞர் வடிவேலு பாலச்சந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ம-66)

## இராணுவத்தை...

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அமைச்சரவை பொறுப்பேற்று சில மணிநேரத்தில் இந்த அதிரடி உத்தரவை இராணுவத் தலைமையகம் விடுத்துள்ளது. இதன்படி, நேற்றிலிருந்து எதிர்வரும் 14 நாட்களுக்குள் குறித்த இராணுவ முகாம் அமைந்துள்ள காணியிலிருந்து வெளியேறுமாறு இராணுவத் தலைமையகத்தால் இராணுவத்தினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - கற்கோவளம் இராணுவ முகாம் அமைந்துள்ள காணியிலிருந்து இராணுவத்தை வெளியேறுமாறு மக்களும், தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளும் கடந்த காலங்களில் பல கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தியிருந்தனர். குறித்த காணியை ஆக்கிரமிக்கும் வகையில் நில அளவீடு செய்வதற்குப் பல தடவைகள் முயற்சிகள் செய்யப்பட்டிருந்த போதிலும் மக்களின் எதிர்ப்பால் அந்தப் பணிகள் தடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(அ-ம-66-26-100)

## டிசெம்பரில்...

ளார் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை நேற்று அறிவிக்கப்பட்டது. இதன் பின்னர் ஜனாதிபதி செயலக வளாகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, ஜனாதிபதியின் இந்தியப் பயணம் தொடர்பில் அமைச்சர் விஜித ஹேரத் கூறியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார டிசெம்பர் மாதம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்ற விடயம் மட்டுமே தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மாறாக திகதி விவரங்கள் எவையும் இன்னமும் இறுதிப்படுத்தப்படவில்லை. இந்தப் பயணத்தின் போது ஜனாதிபதி அநுரவும், இந்தியப் பிரதமர் மோடியும் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தவும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார வெற்றிபெற்ற பின்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அவரை நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்திருந்தார். அத்துடன், இந்தியாவுக்கு வருமாறு பிரதமர் மோடியின் அழைப்பையும் அவர் கையளித்திருந்தார். எனினும், நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக ஜனாதிபதி அநுரவின் இந்தியப் பயணம் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## தேசியப்...

அவரது நியமனம் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது.

சுகத் வசந்த டி சில்வா கண்பார்வையற்றவர் என்பதால், நாடாளுமன்ற ஆவணங்கள் இனி பிறெய்லி எழுத்துகளிலும் அச்சிடவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ரொஷானி குணதீர தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்கும் உரிமை சுகத் வசந்த டி சில்வாவுக்கும் உள்ளது. எனவேதான் நாடாளுமன்ற ஆவணங்களை கண்பார்வை அற்றவர்களுக்கான பிறெய்லி எழுத்துகளிலும் அச்சிட முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ரொஷானி குணதீர மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுகத் வசந்த டீசில்வாவுக்கு பின்வரிசையில் இலகுவாக அமரக்கூடிய வகையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அவருக்கு உதவியாக உதவியாளர் ஒருவர் எந்நேரமும் அவருடன் இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதகவும் நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ-ம-6)

## அமைச்சரவையில்...

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு பதவி, சரோஜா போல்ராஜிடமும், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளம் அமைச்சு பதவி இராமலிங்கம் சந்திரசேகரனிமும் கையளிக்கப்பட்டுள்ளன. இவர்கள் இரண்டு பேரும் தமிழ் மொழியில் பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## அதிகாரத்தை...

பங்கேற்றார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இலங்கை வரலாற்றில் எப்பொழுதும் வடக்குக்கு எதிராக தெற்கு அரசியலும், தெற்கிற்கு எதிரான வடக்கு அரசியலும்தான் அரசியல் வரைபடத்தில் பொதிந்திருந்தது. அல்லது ஒவ்வொரு மக்கள் குழுக்களுக்கு இடையில் சந்தேகம், அவநம்பிக்கை, குரோதம் என்பவற்றைத் தூண்டும் அரசியலே காணப்பட்டது. ஆனால் இந்தத் தேர்தல் முடிவுகள், பிரித்தாளும் அரசியல் இனிச் செல்லாது என்பதையே வெளிப்படுத்தியுள்ளன. வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை ஒரே மையப்புள்ளியில் இணைக்க எம்மால் முடிந்துள்ளது.

எமக்கு வாக்களித்தவர்கள் சாதகமான விடயத்தை தேர்தலின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர். எமக்கு வாக்களிக்காதவர்களிடமும் எமது எதிர்பார்ப்புகள் உள்ளன என நாம் முழுமையாக நம்புகிறோம். எனவே தேர்தலில் மகிழ்ச்சி அடையும் குழு மற்றும் தேர்தலால் விரக்தியடைந்த குழு என இரண்டு குழுக்கள் நாட்டில் இல்லை.

இந்தத் தேர்தலில் பல தனித்துவங்கள் உள்ளன, அளவு ரீதியாக நோக்கினால், இலங்கை வரலாற்றில், பொதுத் தேர்தலொன்றில் கிடைத்த மிகப்பெரிய வெற்றி இது. எமது நாட்டுக்கு பல்வேறு வகையான வெற்றிகள் கிடைத்த போதெல்லாம், எமது பொதுவான இயல்பு தோல்வியுற்றவரின் அல்லது மற்றைய தரப்பினரின் மனதை நோகடிக்கும் மற்றும் காயப்படுத்தும் வரலாறாகும். அது கடந்த தேர்தலுடன் முற்றுப்பெற்றுள்ளது - என்றார். (அ-ம-இ)

## யானையால்...

ஒட்டுசுட்டான் - இத்திமடு வீதியில், வயல் காவலுக்காகச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த சம்மளங்குளம் பகுதியினைச் சேர்ந்த இரத்தினசிங்கம் மகேந்திரராசா (வயது-62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-19-26)

## நவம்பர் 23...

கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 22ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக கல்வியமைச்சுத் தெரிவித்துள்ளது.

நவம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை பாடசாலைகளுக்கான விடுமுறை வழங்கப்படவுள்ளது. இந்த நிலையில் மூன்றாம் தவணைக் கற்றல் செயற்பாடுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-66)

## ஆளுந்தரப்புக்கு...

இதன்படி ஆளும் தரப்பின் பக்கமாக 116 நாடாளுமன்ற உறுப்பினர்களும், எதிர்தரப்பு வரிசையில் 43 உறுப்பினர்களும் அமரவுள்ளனர். இருக்கைகள் பற்றாக்குறை காரணமாக, இத்தனை பேர் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமரும் அரிய நிகழ்வு இலங்கை வரலாற்றில் இதுவே முதற் தடவையாகும். (அ-ம-இ)

## அமைச்சரவை...

திஸாநாயக்கவின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன. பிரதமர் ஹரிணி அமரசூரியவின் கீழ் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலின்போதும், நாடாளுமன்றத் தேர்தலின்போதும் மிகக் குறைந்த உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையே அறிவிக்கப்படும் என்றும், இராஜாங்க அமைச்சர்கள் என்ற விடயமே இல்லாதொழிக்கப்படும் எனவும் தேசிய மக்கள் சக்தியினர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தனர். அதை மெய்ப்பிக்கும் வகையிலேயே இந்த அமைச்சரவை அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அறிவித்த நேற்றைய தினமே பிரதமர் ஹரிணி, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட சிலர் அமைச்சுளுக்குச் சென்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

**(அமைச்சரவை முழு விவரம் பக்கம் - 02)**

## லஞ்சம்...

லில் வைக்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 18 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்.

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காப்பற் வீதி 250m தூரம்
- தண்ணீர் ஊற்று, செம்மண் நிலம், நல்லசூழல்
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 15 லட்சம்

பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00 வரை

(CS/29278) J-1

**077 468 3354, 077 288 0152, 076 739 0413**

# நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

**Lion Sheperd**

இரண்டு நாய்க்குட்டிகள் உடனடி விற்பனைக்கு உண்டு. 1 ஆண், 1 பெண். சோடியாக எடுக்க விரும்புவர்களுக்கு விலைபேசித் தீர்மானிக்கலாம்.

1 குட்டி - 25000/- , தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

(CS/1892) J-1

**Call:- 074 242 6642**

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 19

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தின மும் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை வித்தியாலயத்தின் திறந்தவெளி அரங்கில் இடம் பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இராமசாமி சிறிதரனின் தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக்கல்வி அதிகாரி சு. நோபேட் உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (ம-66)

## ஒரே நேரத்தில் மூன்று விமானங்களில் பழுது!

சிறிலங்கன் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான 3 விமானங்களில் ஏற்பட் டுள்ள தொழில்நுட்பக் கோளாறு காரண மாக சில விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் பல விமா னங்கள் இரத்து செய்யப்படலாம் எனவும் சில விமான சேவைகள் தாமதமாகலாம் என வும் சிறிலங்கன் விமான சேவையின் பேச் சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-22)

## வேலையாட்கள் தேவை

பின்வரும் வேலைகளுக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

- வெல்டிங்
- வாகனம் சேவிஸ் செய்தல்

(CS/56890) J-1

**077 901 8742**

# VACANCY

## Coordinating Secretary

*Colombo Office*

We have a vacancy for an experienced and dedicated individual who could perform a variety of day to day tasks efficiently

- Organize and coordinate office operations
- Maintain files and records
- Handle business correspondence including email, Facebook, and WhatsApp accounts
- Maintaining business calendar, scheduling meetings, taking meeting minutes, and following up
- Liaise and coordinate with government authorities and officers
  To conduct research and information analysis
- Assist Managing Director with all administrative work

**Qualifications:**

Minimum of 10 years experience in an executive position
Pleasant personality with excellent coordination, communication, and interpersonal skills
High level of computer literacy

Retired persons in good health could apply. Salary negotiable

Apply within 10 days by email: **newjobvace@gmail.com**

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 09 . 1944



மறைவு
16 . 11 . 2024

## வைத்திலிங்கம் சச்சிதானந்தம்

**(முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)**

(CS/1890) J-1

யாழ்ப்பாணம் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கரவெட்டியை வசிப்பிடமாகவும், அவுஸ்ரேலியாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சச்சிதானந்தம் (முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்) அவர்கள் கடந்த 16.11.2024 சனிக்கிழமை அன்று சிட்னி அவுஸ்ரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பகீரதன் (மருத்துவர்), சத்தியன் (பொறியியலாளர்), மயூரன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அஞ்சலா, சரண்யா, ஆதித்யா ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்ஷயன், நேத்திரன், கவினயன், ஆதிரா, அக்ஷரா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், சதானந்தம், திலகவதி, கமலநாதன், ஞானப்பூங்கோதை, அமரர்களான செல்வவிநாயகம், சிவானந்தம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தில்லைநாதன், மனோகரன், சர்வேஸ்வரி, வதனா, மகேஸ்வரி, தவம், திலகவதி, ஞானேஸ்வரி, பத்மநாதன், சுந்தரலிங்கம், சக்திதேவி, சிவயோகதேவி, நிர்மலா, அமரர்களான மகாலிங்கம், குலராஜவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலகிருஸ்ணன், சேதுராகவன், அமல்ராஜ், அமரர் செல்வராசா ஆகியோரின் சகலனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை மெல்பேர்னில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| தகவல்: செல்லப்பா தில்லைநாதன் (மைத்துனர்) | +94773013432 |
| திலகவதி தில்லைநாதன் (சகோதரி) | + 94769480877 |
| வைத்திலிங்கம் சதானந்தம் (சகோதரன்) | + 94773241987 |
| சச்சிதானந்தம் பகீரதன் (மகன்) | + 61415054363 |
| சச்சிதானந்தம் சத்தியன் (மகன்) | + 61403436970 |
| சச்சிதானந்தம் மயூரன் (மகன்) | + 6591383795 |

**சம்பந்தர் இல்லம்,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.**

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 03 . 1931



மறைவு
18 . 11 . 2024

## ஜோண் சின்னட்டி யேசுதாசன்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் தற்போது சென் பீற்றர்ஸ் ஒழுங்கை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோண் சின்னட்டி யேசுதாசன் நேற்று (18.11.2024) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோண் சின்னட்டி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற கிறிஸ்ரபெல் இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும், ஏபிரகாம் விக்கிரமசேகரன் (ஓய்வுபெற்ற விவசாய காப்புறுதி முன்னாள் பிரதிபணிப்பாளர்), டானியல் விஜயசேகரன் (கனடா), மேரி இராஜமனோகரி (பிரான்ஸ்), இராஜசுந்தரி (ஆசிரியை - யாழ்ப்பாணக் கல்லூரி), ஜெயசித்திரா (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புவனேந்தினி, சசிடீபிகா (கனடா), பிரபாகர் (பிரான்ஸ்), ரவீந்திரமோகன், சிறீதரன் (வைத்தியர் - போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆர்த்திகா, யதுர்சிகா, அக்ஷனன், அவிஷ்ணிகா, ஜினோ, ஜெனிவி, ஜொயல், ஜூலியா, அபிஷன், சுவேத்தா, பிரியங்கா, அர்ஜுன், சஞ்ஜெயன் ஆகியோரின் அன்புப் பேரனும், நவோமி, இஷாய் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளைமறுதினம் (21.11.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

**இல.4, சென்.பீற்றர்ஸ் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**

(CS/56704 N-1

**தகவல்:
குடும்பத்தினர்**

077 327 6540, 076 966 2385

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.